# புனித அந்தோணியார் ஆலயம், சத்தியமூர்த்தி நகர், சென்னை - 39

## ஞாயிறு அறிவிப்புக்கள் - 30.4.2017

01. இன்று பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு. இன்றைய திருப்பலியினை சிறப்பிக்கின்ற அல்போன்ஸா அன்பிய குடும்பங்களுக்கு செபம் கலந்த பாராட்டுக்கள். இன்றைய திருப்பலி முடிந்தவுடன் ஞாயிறு மறைக்கல்வியும், இளையோர் கூட்டமும் வழக்கம்போல் நடைபெறும்.

02. மே மாதம் 1-ம் தேதி முதல் தேவதாயின் வணக்க மாதத்தினை சிறப்பிக்கின்றோம். அதனை முன்னிட்டு ஒவ்வொரு நாளும் மாலையில் 6.00 மணிக்கு செபமாலை, அன்னையின் தேர்பவனி, தேவதாயைக் குறித்து சொற்பொழிவு, திருப்பலி ஆகியவை நடைபெறும். திருப்பலி முடிந்தவுடன் அன்றைய திருப்பலி சிறப்பிக்கின்ற அன்பியத்திற்கு அன்பியக் கூட்டம் நடைபெறும். இதனை முன்னிட்டு மே மாதம் முழுவதும் வார நாட்களில் காலைத் திருப்பலி நடைபெறாது. ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் வழக்கம் போல் திருப்பலிகள் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

03. வருகிற நாட்களில் கீழ்வரும் அன்பியங்களிலுள்ள குடும்பங்களை நம் பங்குத்தந்தை காலை மற்றும் மாலை வேளைகளில் சந்தித்து பாஸ்கா விழாவின் ஆசீர்வாதத்தினையும் உயிர்த்த ஆண்டவரின் உன்னத அருளையும் வழங்குவார்.

30/4 – ஞாயிறு – அல்போன்ஸா அன்பியம்
01/5 – திங்கள் – சின்னப்பர் அன்பியம்
02/5 – செவ்வாய் – தோமினிக் சாவியோ அன்பியம்
03/5 - புதன் - தோமையார் அன்பியம்
04/5 - வியாழன் - செபமாலை அன்பியம்
05/5 - வெள்ளி - வெரோணிக்கா அன்பியம்
06/5 - சனி – செபஸ்தியார் அன்பியம்

04. வார திருநாட்கள் விவரம்:

01/5, திங்கள் - புனித சூசையப்பர் – தொழிலாளர்களின் பாதுகாவலர் விழா
02/5, செவ்வாய் - புனித அத்தானிசியுஸ் விழா மற்றும் புனித அந்தோணியார் வார நாள்
03/5, புதன் - அப்போஸ்தலர்களான புனித பிலிப்பு மற்றும் ஜேம்ஸ் விழா

05. மே மாதம் 1-ம் நாள், வருகிற திங்கட்கிழமையன்று, புதிய மாதத்தை துவங்குகின்றோம். கடந்த மாதத்தில் இறைவன் செய்த நன்மைகளுக்காக நன்றி கூறிடவும், புதிய மாதத்தில் இறைவன் நம்மை சிறப்பாக வழிநடத்திடவும் நடைபெறும் அதிகாலை செபத்தில் அனைவரும் கலந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

06. மிகவும் ஏழ்மையிலுள்ள மாணவ மாணவியர்களுக்கு பங்கின் சார்பாக கல்வி உதவித்தொகை வழங்கப்படும். சம்பந்தப்பட்டவர்கள் பங்குத்தந்தைக்கு விண்ணப்பக் கடிதம், பள்ளிக் கட்டணத் தொகை ரசீது, மற்றும் பங்கு குடும்ப கையேடு ஆகியவற்றுடன் அன்பியத் தலைவர்களோடு சேர்ந்து பங்குத்தந்தையை சந்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**07. திருமண அறிவிப்புகள்:**

1 .நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, கென்னடி நகரில் வசிக்கும் பெற்றோர் ஜெயபால் - அமிர்தம் அவர்களின் மகன் வின்சென்ட் எழிலரசனுக்கும், நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, சத்தியமூர்த்தி நகரில் வசிக்கும் பெற்றோர் ஜெயராஜ் - மேரி செலீன் அவர்களின் மகள் சகானா வினோசியால் ஜாய்ஸ்க்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை.

2. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, சத்தியமூர்த்தி நகரில் வசிக்கும் பெற்றோர் ஜேக்கப் மேனுவேல் - ரோஸ்லீன் அவர்களின் மகன் சார்லஸ் ராஜ்க்கும், நமது உயர் மறைமாவட்டம், அருள் நகர் பூண்டி மாதா பங்கு, பேங்க் காலனியில் வசிக்கும் பெற்றோர் சாலமோன் - மேரி உஷா அவர்களின் மகள் அமலி மோனிஷாவுக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை.

3. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MGR நகரில் வசிக்கும் பெற்றோர் சகாயம் - செல்வமேரி அவர்களின் மகன் பால் ராஜ்க்கும், நமது உயர் மறைமாவட்டம், பண்ணூர் பங்கு, சூசைபுரத்தில் வசிக்கும் பெற்றோர் பீட்டர் - லீமா ரோஸ் அவர்களின் மகள் புனிதா மேரிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை.

4. பாண்டி-கடலூர் உயர்மறைமாவட்டம், காணிக்கை அன்னை பங்கு, வாலீஸ்பெட் கிராமத்தில் வசிக்கும் பெற்றோர் அந்தோணிசாமி – சம்மனசு மேரி அவர்களின் மகன் வனத்தின் இரட்சகர்க்கும், நமது உயர் மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் வின்சென்ட் - குமாரி அவர்களின் மகள் சுதா புளோராவுக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலை.

5. நமது உயர்மறைமாவட்டம், புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கு, பிராட்வேயில் வசிக்கும் பெற்றோர் தனராஜ் - ஜான்ஸி அவர்களின் மகன் சகாய ராஜ்க்கும், நமது உயர் மறைமாவட்டம், நமது பங்கு, சத்தியமூர்த்தி நகரில் வசிக்கும் பெற்றோர் பென்ஜமின் - அந்தோணியம்மாள் அவர்களின் மகள் மகிமை ஜூலிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலை.

6. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, உதய சூரியன் நகரில் வசிக்கும் பெற்றோர் தனசேகர் - இயேசு அடியாள் அவர்களின் மகன் ஜான் ஸ்டீபனுக்கும், பாண்டி கடலூர் உயர் மறைமாவட்டம், புனித மதுரநாயகி பங்கு, மரக்காணத்தில் வசிக்கும் பெற்றோர் அந்தோணிசாமி – ஞானமேரி அவர்களின் மகள் சுகன்யா மேரிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலை.

7. பாண்டி-கடலூர் உயர்மறைமாவட்டம், ஜென்மராக்கினி மாதா பங்கு, மணப்பட்டில் வசிக்கும் பெற்றோர் தணிகாசலம் - அம்புஜம் அவர்களின் மகன் இருதயநாதனுக்கும், நமது உயர் மறைமாவட்டம், நமது பங்கு, கோல்டன் குடியிருப்பில் வசிக்கும் பெற்றோர் இருதயராஜ் – அருள்மேரி அவர்களின் மகள் வேளாங்கன்னிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலையாக இருந்தாலும் மூன்றாவது ஓலையாக வாசிக்கப்படுகின்றது.

இத்திருமணங்களில் ஏதாவது விக்கினமிருந்தால் பங்குதந்தைக்கு தெரிவிக்க வேண்டியது நம் கடமையாகும்.